**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.63/2025**

PW-3

| Name | காயத்ரி(PW3) | | |
|---|---|---|---|
| Husband's Name | மகேஸ்வரன் | தொழில் | |
| Village | வள்ளிபுரம் | | |
| Taluk | அவிநாசி | Age | 38 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். கடந்த 13.11.2024 தேதி அன்று காலை 6 மணி அளவில் பெருமாநல்லூர் டு குன்னத்தூர் செல்லும் ரோட்டில் என் மாமனார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த சமயம் யமஹா கிரக்ஸ் இருசக்கர வாகனம் பின்னால் வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு என் அம்மா என் கணவருக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நானும் என் கணவரும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு கூட்டம் கூடி இருந்தது. அப்போது என் மாமனாருக்கு தலையிலும் காலிலும் ஏற்பட்டு ரோட்டில் இடது புறமாக உள்ள மண் ரோட்டில் படுத்த நிலையில் இருந்தார். என் மாமனார் சுயநினைவின்றி படுத்திருந்தார். சம்பவ இடத்தில் இருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் என் மாமனாரை முதலில் சரண் மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று அங்கு இருந்து என் மாமனாரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். மறுநாள் காலை 6.50 மணியளவில் என் மாமனார் காலமாகிவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். போலீசார் பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலீசார் என்னை கோவை அரசு மருத்துவமனையில் வைத்து சம்பவம் நடந்த மறுநாள் விசாரித்தனர். போலீசார் என்னை, என் கணவர் மற்றும் என் தாயாரை

கோவை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். ரவிச்சந்திரன், கதிர்வேல் ஆகியோர் அரசு மருத்துவமனைக்கு வந்திருந்தார்களா என்றால் இல்லை. கதிர்வேல் நான்கு தெரு தள்ளியுள்ளார். ரவிச்சந்திரன் எனக்கு யார் என்று தெரியாது. மற்ற சாட்சிகள் என்னுடைய பகுதியில் வசிக்கிறவர்கள். பட்டியல் சாட்சி மற்ற நபர்கள் அரசு மருத்துவமனைக்கு வரவில்லை சம்பவ இடத்தில் இருந்தார்கள். மேற்சொன்ன விபரத்தை தான் நான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் சம்பவ இடம் சென்ற போது பட்டியல் சாட்சியில் உள்ள மற்ற நபர்கள் அங்கு இருந்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு அப்போதே வந்து விட்டார்களா என்றால் இல்லை. போலீசார் சரண் மருத்துவமனைக்கு வந்தார்கள். போலீசார் என்னை சரண் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் என் மாமனாருக்கு விபத்து ஏற்பட்டதால் துக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. சம்பவ தினத்தன்று மழை பெய்ததா என்றால் லைட்டாக தூரல் இருந்தது. என் மாமனார் என்பதற்காக நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு நான் பரிந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |